## ★ சிலாபம் கடலில் பீரங்கிப் படகு மூழ்கியது!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 26 இதழ் 244
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12 — 10 — 1992

(கொழும்பு)
சிலாபம் தலைவில கடற் பரப்பில் சென்று கொண்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகொன்று நேற்று காலை கடலில் மூழ்கியது.
(4-ம் பக்கம் பார்க்க)

## கல்முனை வீதியில் 9 படை முகாம்கள்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு - கல்முனை வீதியில் 9-வது ஸ்ரீலங்கா ராணுவ முகாம் அமைக்கப் பட்டுள்ளன. மிகக் குறுகிய இடைவெளிகளில் ராணுவத்தினர் இவ்வொன்பது முகாம்
(4ம் பக்கம் பார்க்க)

## மாதம் ஒன்றுக்கு 130 படையினர் பலி

(கொழும்பு)
ஸ்ரீலங்கா படையினருக்கு கடந்த ஆறுமாதகாலம் மிக மோசமான காலப்பகுதியாகவே கணிக்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் மாதம் 130 படையினர் வீதம் 800
(4ம் பக்கம் பார்க்க)

## ★ தலைநகரில் நடைபெற்ற

# பாதுகாப்பு உயர் மாநாட்டில் தளபதிகள் கருத்து மோதல்

### அதிகார மாற்றத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு ராணுவ நடவடிக்கை குறித்து கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற படைத்தளபதிகளின் உயர் மாநாட்டில் தளபதிகள் மத்தியில் பெரும் கருத்து மோதல்களும், முரண்பட்ட விமர்சனங்களும் இடம்பெற்றுள்ளதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கை தலைமைப்பொறுப்பை கூட்டுப் படைத் தலைமையகத்திடம் ஒப்படைப்பது குறித்து மேற்படி பாதுகாப்பு மாநாடு நடைபெற்றபோதே இவ்வாறான கருத்துமோதல்கள் உயர் தளபதிகள் மத்தியில் இடம் பெற்றது.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு பல தளபதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும்
(4ம் பக்கம் பார்க்க)

### புதிய உத்தரவை பிரேமா நேற்று பிறப்பித்தார்

(கொழும்பு)
இராணுவ கூட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் அதிகாரங்களை ஒப்படைப்பதற்கான ...த்தரவை ஜனாதிபதி பிரேம
(4ம் பக்கம் பார்க்க)

### இராணுவ அதிகார மாற்றம் புலிகளுக்குகிடைத்தவெற்றி

(கொழும்பு)
இராணுவ தலைமைப்பீடத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி அதிகாரங்களை மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கும் அளவிற்கு
(4ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் நிலையைப் பொறுத்தே அரசு தீர்வை முன்வைக்கும்

#### - அமைச்சர் ரணில்

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வுகுறித்து விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டைப் பொறுத்தே அரசு பிரச்னைக்கு தீர்வு குறித்து யோசனை எதனையும் முன்வைக்குமென அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இலங்கையின் ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம் போன்ற நிபந்தனைகளை புலிகள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் அரசு எந்தவித மான யோசனையையும் முன் வைக்கமாட்டாது.

இதேநேரம் தெரிவுக்குழுவில் ஏற்படும் கருத்தொருமைப்பாட்டை அரசு ஏற்குமென்றும் புலிகளிடம் விசேஷமான யோசனைத்திட்டமேதும் இருந்தால் தெரிவுக்குழுமுன் அதனை அவர்கள் முன்வைக்கலாமென்றும் கூறினார். (சி)

### மனித உரிமை மீறல் விசாரணைக்கு அரசு அனுமதி மறுத்துள்ளது

(கொழும்பு)
ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட விசாரணைக்குழுவிற்கு மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான அதிகாரங்களை வழங்க அரசு மறுத்துள்ளது.

ஐ.நா வின் மனித உரிமைகள் குழு முன்வைத்த பரிந்துரைகளை செயற்படுத்துவதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறிய ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனை செய்தியாளர்கள் கேள்விக்கணைகளால் திணற வைத்தனர்.

1983-ஆம் ஆண்டிற்கும் 1991 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பாகவுள்ள பாதுகாப்பு படையி
(4ம் பக்கம் பார்க்க)

### இலங்கைக்கு எதிராக ஐ.நா. குழு குரல் எழுப்பும்

(கொழும்பு)
இலங்கையில் நிகழும் மனித உரிமைகள் மீறலுக்கு எதிராகத் தொடர்ந்து குரல்கொடுக்கப்படும் என இலங்கைக்கு வந்துள்ள "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின்" தலைவர் லால் பெல்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மாறிவரும் நீதிமுறை மாற்றங்களுக்கு இலங்கையில் மனித உரிமைகள் பேணுவதற்கு இலங்கை
(4-ம் பக்கம் பார்க்க)

நம் நலம் காக்க
நமக்கொரு மரம் நாட்டிடுவீர்

### மன்னிப்புச் சபை இலங்கை வருகிறது

(லண்டன்)
சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் குழு இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் இந்த விஜயத்
(4ம் பக்கம் பார்க்க)

### ★ காணாமற்போனோர் பற்றிய ஆவணங்களை அழிக்க அரசு முயல்கிறது

(கொழும்பு)
இலங்கையில் 1983ம் ஆண்டு தொடக்கம் 1991 வரையான காலப் பகுதியில் 12,000 பேர் காணாமற்போயுள்ளனர் என்று ஆதாரத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்குழு சமர்ப்பித்த அறிக்கையை இலங்கை அரசு அழித்துவிட முயற்சிக்கிறது என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இப்படிச் செய்வதன்மூலம் எதிர்காலத்தில் மனித உரிமைகளைக் கவனத்தில் எடுத்து நிதியுதவி அளிக்கும் நாடுகளில் இருந்து பெருமளவு நிதி பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு எண்ணுகிறது.

இதுகுறித்து பத்திரிகையாளர்கள் அரசை கடுமையாக விமர்சித்துள்ளனர். (சு-)

### 2,700 விரிவுரையாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு!

(கொழும்பு)
நாடு முழுவதிலுமுள்ள சகல பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த 2,700 விரிவுரையாளர்களும் இம்மாதம் 29-ம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு உட்பட ஆறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள வேலைநிறுத்தம் நடைபெறவுள்ளதாகவும்
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILLA Capsules கிடைக்குமிடம் எஸ். டி. மெடிக்கல்ஸ், ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (சி-6841)

### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சி- 6870)

### அராலியூரரின் நாடகங்கள்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள்! 1. பொலிடோலே கதி, 2. பணமோ பணம் மேடை நாடகங்கள். 3. கெட்டிக் காரர்கள், 4. முதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள் 21 நாடகங்கள். (சி-6823)

### சித்திராலயா இடமாற்றம்

இதுவரை காலமும் ரோசில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த எமது நிறுவனம் 5-10-92 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள பழைய இடத்தில் இயங்கு கின்றது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறோம் (சி-6863)

### PHARMACIST
### பார்மசிஸ்ற்

மருந்தச்சாலை (Pharmacy or Dispensary) நடத்துவதற்கோ அல்லது அதில் வேலை செய் வதற்கோ அரச பதிவு பெற்ற பார்மசிஸ்ற் (Registered Pharmacist) ஒருவர் தேவை. விரும்புபவர்கள் சம்பளம் மற் றைய விபரங்களுடன் விண் ணப்பிக்கவும் விளம்பர இல. சி-6879, C/o ஈழநாடு, யாழ்ப் பாணம். (சி-6879)

### துரித மீட்டற் பயிற்சி

ஆண்டு 5 புலமைப்பரிசில் வெளிவந்துவிட்டது புதிய கல்வி நிலையத்தால புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சி (15 வினாத்தாள்களைக்கொண்டு —விடைகளுடன்) ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது. புதிய கல்வி நிலையத் திலும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (ஏ-498)


### விசேட கூட்டம்

(ஏழாலை)

பரியோவான் முதலுதவிப் படையினது விசேட கூட்டம் ஒன்று நாளை 13-10-92 செவ் வாய்க்கிழமை மாலை 2-30 மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள மாகாண அலுவலகத்தில் நடை பெறும். [162]

### வாராந்த ஆராதனை

(அரியாலை)

யாழ். அஞ்சனந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னை யின் வாராந்த ஆராதனை ஒவ்வொரு வியாழக்கிழமை யும் மாலையில் நடைபெற்று வருகிறது. (59)

### பிரதேச சபை உப அலுவலகம் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் இம்மாதம் 15-ந் திகதி முதல் மீண்டும் மருதங்கேணியில் இயங்கவுள ளது. [61]

# இந்தியப் படைகள் செய்ததையே இலங்கை இராணுவமும் செய்கிறது

(நெல்லியடி)

"கடந்த ஐந்து வருடங்க ளுக்கு முன்பு தமிழ் மக்க ளாகிய எம்மைப் பாதுகாத்து எமக்கு உணவுதந்த இந்தியப் படை எம் சொந்த மண்மீது பெரிய அட்டூழியங்களை கட்ட விழ்த்து தமது இராணுவ வாகனங்களினாலேயே பலரை மிதித்துக்கொன்ற காலத்தை நாம் சந்தித்தோம்"

1987 ம் ஆண்டுநடைபெற்ற 'ஒபரேஷன் லிபரேஷனின்' போது இந்தியா அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தது தாம் விரும்பியவாறு நாம் நடக்கவில்லையென்று கோபப் பட்டனர். அக்காலப்பகுதியில் வலிகாமத்தில் தாக்குதல்களை நடாத்திய சிங்களப்படையை நாம் எதிர்த்துப் போராடி னோம். அச்சமயம் உருளைக் கிழங்கையும், உணவுப்பார் சலையும் உலங்குவானூர்தி மூலம் போட்ட இந்தியப்படை எம்மைப் பாதுகாக்குமென நினைத்த தமிழ்மக்கள் காலப் போக்கில் இந்தியாவின் நிலைப் பாட்டை உணர்ந்தனர்

இவ்வாறு 1987 ம் ஆண்டு அக்டோபர் 10ம் தி திஇந்திய- இலங்கை யுத்தத்தில் சோப் பாய் பகுதியில் வீரச்சாவு எய்திய விடுதலைப்புலிகளின் முதல் பெண் போராளி 2-ம் லெப்டினன் மாலதியின் 5-ம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் வதிரி-கரவெட்டி செல்லையா பாடசாலைக்கு அருகில் நடை பெற்றபோது அஞ்சலிஉரை நிகழ்த்தியவிடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு யோகரட்ணம் யோகி குறிப்பிட்டார்.

வடமராட்சி மகளிர் முன்ன ணிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசுகையில், இந்தியப்படை இங்கு இருந்த காலத்தில் தான் தியாகி திலீபன் 5 அம் சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதமிருந் தார். அவ்வேளை இந்தியப் படையினரின கொள்ளைகள், கொலைகள், பாலியல் வன் முறைகள் இடம்பெற்றன. லெப் கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வர் கடலில் வைத்து பிடிக்கப் பட்டனர்.

நாம் திருப்பிச் சுடுவோ மென இந்தியா எதிர்பார்க்க வில்லை. அவர்களுக்கு யாழ்ப் பாணம் எப்படிப்பட்டது? நாம் எங்கே நிற்கிறோம் என் பதும் புலனாகவில்லை.

இந்தியப்படை ஆயுதத் தைக் களைய வந்து ஆயுத த்தை எம்மிடம் தந்தது. அந்த யுகதியைத்தான் இன் றைய இலங்கை இராணுவ மும் செய்கிறது நாம் சிங் களப் படையிடமிருந்து பல வகையான ஆயுதங்களை அள்ளி எடுக்கின்றோம் கடற்புலி என்றால் அரசுக்கும் படை யினருக்கும் பெரும் பயம்.

முன்னைய காலத்திலிருந்த பல நிர்வாக அமைப்புகள் எம்மால் தூக்கி எறியப்பட் டுள்ளன. இப்பொழுது 24 மணி நேரமும் காவல்துறை யினர், போராளிகள், எமது தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்கின்றார்கள். முற்காலத்தில் பணத்தை வைத்துக் கொலை புரிந்தவன் தப்பினான், பாதிக்கப்பட்ட வனைப் பற்றிக் கவலையில்லை. அப்போது நீதிபதிக்கும் வழக் கறிஞர்களுக்கும் பெரும் புக ழும் பாராட்டும் கிடைத் தன. பணத்தின் மூலம் சதி செய்வித்தவன் காவடியும் எடுத்திருப்பான். இவை எல் லாம் அந்தக்காலம்.

## கரவெட்டியில் 'யோகி'

ஒரு காலகட்டத்தில் ஒரு சமூகத்தின் மிகப்பெரிய பல மான பெண்களை வீட்டில் அடக்கிவைத்தோம் இப் போது அந்த அடக்குமுறை மாறிவருகிறது பெண்கள் பாரமான வாகனங்கள் ஓட்டு கிறார்கள் பாரமான வேலை களைச் செய்கிறார்கள். 5, 10 மைல்களுக்கு உணவுகளையும் ஆயுதங்களையும் சுமந்து செல் லும் அளவிற்கு பெண் போராளிகள் எமது போராட் டத்தை வென்றெடுக்கின்ற னர். மகளிர் படைப்பிரிவினர் இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்களுக்காக போராட்ட த்தை வளர்த்து மிகப்பெரும் பங்களிப்புச் செலுத்துகிறார் கள் பல நாடுகளைப்பொறுத்த வரையில் பெண்களே அந் நாட்டின் தலைவர்களாக விளங்குகின்றார்கள்.

நாம் எமது தலைமையைப் பொறுத்தவரையில் சாதிய பிரதேச, மதவேறுபாடின்றி ஆண்கள், பெண்களை ஒடுக்க முடியாத சூழ்நிலையை ஏற்ப டுத்தவேண்டும்என்றும் குறிப் பிட்டார். (160)

### பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூ ரியில் கடந்த 7ம் 8ம் திகதி களில் சித்திரம், வாழ்க்கைத் திறன் ஆகிய பாடங்களுக் கான பொருட்காட்சி நடை பெற்றது. முறைசாராக்கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிர மணியமும் திருமதி இ. சண் முகரட்ணமும் பொருட்காட் சியை ஆரம்பித்துவைத்தனர்.

### 'மர நாற்று' மேடை

(அரியாலை)

யாழ். செயலகம் முன்பாக வுள்ள பிரதேச வனபரிபாலன இலாகா பணிமனைக்கு அடுத் துள்ள பண்ணைகளில் பெரு மளவு மரநாற்று மேடைகள் அமைக்கப்பட்டு பலவித மரங் கள் நாற்றுகள் போடப்பட் டுள்ளன. 59

### 3 கடைகளில் திருட்டு

(உடுவில்)

சுன்னாகம் பலநோக்கு கூட் டுறவு சங்கத்துக்குச் சொந்த மான ஏழாலை தெற்கு பகுதி யில் இரு கிளைக்கடைகளும், 28 ஏ. இலக்க விற்பனை நிலைய கிளைக்கடையும் இரவுவேளை களில் உடைக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான உணவுப் பொருட்களும் ஏனையபொருட் களும் திருடப்பட்டுள்ளன. (109)

### இன்ரரக்கழகம் உதவி

(நல்லூர்)

இராணுவ நடவடிக்கை யால் இடம்பெயர்ந்து மானிப் பாய் அகதிமுகாமில் தங்கி யிருக்கும் குடும்பங்களுக்கு யாழ். பரியோவான் கல்லூரி யின் இன்ரரக்ட் கழகத்தினர் உடுபுடவைகளையும் மாணவர் களுக்குத் தேவையான 200 கொப்பிகளையும் 200 பேனை, 200 பென்சில்களையும் பாட சாலையில் சேகரித்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தி னூடாக வழங்கியுள்ளனர். 158

### வயிற்றோட்ட நோயினால் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பிரதேசத்தி லுள்ள அகதி முகாம்களில உள்ள மக்களில் 75 வீதமா னோர் வயிற்றோட்ட நோயி னால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள வட்டா ரங்கள் மூலமாக தெரிய வரு கின்றது.

தற்போது பெய்துவரும் பெருமழை காரணமாக தொற்று நோய்களும் குறிப் பாக குடல் நோய்கள் அதி கரிக்கலாம் என்றும் குடிதண் ணீரை கொதிக்க வைத்து பருகுமாறும் சுகாதாரபகுதி யினர் தெரிவித்துள்ளனர். [72]

### மாதாந்த கொடுப்பனவு

(மானிப்பாய்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களுக்கான யூலை மாதத்திற்குரிய கொடுப் பனவுகள் தற்போது வழங்கப் படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் தத் தமது கிராமசேவை அலுவலர்களிடம் சென்று இவற்றைப்பெற்றுக் கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)


## அறிவித்தல்

வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து
வர்த்தகர் சங்கம்

எமது நிர்வாகசபை ஏகமனதாக
தலைவர் எஸ். சிவபாதம் அவர்களை
(சரீமிளா பாமசி)
1992—10—10 லிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதை
சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகிறோம்.

நிர்வாகசபை உறுப்பினர்
யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்.
(சி-6884)

## கண்ணீர் அஞ்சலி

எமது அச்சுவேலி மேற்கு உற்பத்திக்
குழுவின் தலைவராக பணிபுரிந்து
மக்களுக்கு அளப்பரிய
சேவையாற்றிய

அமரர்
திருச்செல்வம் மேரி ஜோசப்

அவர்களின் மறைவையொட்டி எமது
இதயபூர்வ அஞ்சலியை தெரிவித்துக்
கொள்கின்றோம

அச்சுவேலி மேற்கு
உற்பத்திக்குழு

தகவல்:
தம்பு அருட்பிரகாசம்
கிராமிய உற்பத்திக் குழு.
அச்சுவேலி, தென்மூலை. (சி-6885)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள்
நிருவாக சபை உறுப்பினரும்
தற்போதைய நலன் விரும்பியும்
எமது பாடசாலையின்
அபிவிருத்திக்கு அளப்பரிய
சேவைகள் பல
ஆற்றியவருமான

அமரர்
திருச்செல்வம் மேரி ஜோசப்

அவர்களின் மறைவையொட்டி எமது
இதயபூர்வ அஞ்சலியை
தெரிவித்துக்கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,
பாடசாலை பழைய மாணவர்கள்.
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி

தகவல்: எஸ். பேரின்பநாதன்
அச்சுவேலி, தென்மூலை. (சி-6886)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மோதல் நிலை உருவாகிறது

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கிடையே நிலவிவந்த கசப்புணர்வு நிலை அதிகரித்ததைத் தொடர்ந்து மோதல் நிலை உருவாகியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்தவாரம் இடம்பெற்ற கட்சியின் வாலிப முன்னணித் தேர்தலின்போது கசப்புணர்வு நிலை முற்றியதைத் தொடர்ந்து பகிரங்க தாக்குதல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக கட்சியின் தலைமைப்பீடத்திலும் சில முக்கிய உறுப்பினர்களிடையேயும் பெரும் கசப்புணர்வும், பதவிப் போட்டிகளும் ஏற்பட்டுள்ளதும் தெரிந்ததே. (க)

## பெனஸிரின் கணவர் விடுதலை செய்யப்பட்டார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிய எதிர்க் கட்சித் தலைவி பெனஸிர் பூட்டோவின் கணவர் அஸிர் அலி சர்தாரி நேற்று முன்தினம் பாகிஸ்தானிய அரசால் விடுதலை செய்யப்பட்டார்.

29 பேரை படுகொலை செய்வதற்கு திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1990-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இவர் கைது செய்யப்பட்டதும் 10இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்மீது சுமத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இவர் பாகிஸ்தான் நாடாளுமன்றின் ஒரு உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## இன்று

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இலக்கியவிழா இன்று திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு அதிபர் திரு க. தங்கராசா தலைமையில் இடம்பெறும்.

மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [154]

★ ★ ★

[கொழும்புத்துறை]

யாழ் பரியோவான் கல்லூரி ஆங்கிலதினவிழா இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. எஸ். தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆங்கிலதினப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. [154]

★ ★ ★

(அரியாலை)

1987ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் இந்திய இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரச்சாவை அடைந்த யாழ். அரியாலையைச் சேர்ந்த லெப். அகிலன் [க. மகேந்திரன் அரியாலை] 5வது ஆண்டு நினைவஞ்சலி இன்று அரியாலையில் அனுஷ்டிக்கப்படுகிறது. [159]

★ ★ ★

(ஏழாலை)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் விசேட கூட்டம் இன்று 12-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.

ஒவ்வொரு சாரணர் குழுவில் இருந்தும் ஒரு குருளைச்சாரணர் தலைவர், சாரணத் தலைவர் [ஆசிரியர்], திரிசாரணர்கள், ஜனாதிபதிச் சாரணர்கள், மாவட்டச் சாரணத் தலைவர்கள் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (162)

## இ. த. ஆசிரியர் சங்க செயலாளர் இடமாற்றத்தை ரத்துச்செய்ய கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு த. மகாசிவம் இடமாற்றம் செய்யப்பட்டதனை மேற்படி சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ் இடமாற்றம் ஸ்தாபனக் கோவை 25. பந்தி 7 க்கு முரணானது என்றும் அடிப்படை தொழிற்சங்க உரிமையை மீறுவதாகவுள்ளது என்றும் யாழ் கல்விப்பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இடமாற்றத்தை உடன் ரத்துச்செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. (க)

விவசாய

## டிப்ளோமா பயிற்சிக்கு போட்டிப் பரீட்சை

(உடுவில்)

1993-95ம் ஆண்டுகளுக்குரிய இரண்டு வருட விவசாய டிப்ளோமா பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்வதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை குண்டசாலை விவசாய பயிற்சிக் கல்லூரி கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் பதினொராம் திகதிக்கு முன்னர் பேராதனை விவசாய திணைக்களப் பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்குரியவர்களை தெரிந்து எடுப்பதற்குரிய போட்டிப்பரீட்சை அடுத்த வருடம் மார்ச் மாதம் 20ம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## கால்நடைகளுக்கான மருந்துகள் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. நோயினால் பாதிக்கப்பட்ட ஆடு, மாடு, பசுக்களுக்கு கால்நடைவைத்திய அதிகாரிகள் பரிசோதித்து எழுதிக் கொடுக்கும் மருந்து வகைகளை இப்பிரதேசத்திலுள்ள தனியார் மருந்துச்சாலைகளில் பெற முடியாது இருப்பதாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்கின்றனர். இதனால்நோய்வாய்பட்ட கால் நடைகள் சிகிச்சையளிக்க முடியாது இறந்துவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## யாழ். ஆஸ்பத்திரியில் 'பனடோல்' தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ் அரசினர் வைத்தியசாலையில் பனடோலுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வைத்தியசாலை மெடிக்கல் கிளினிக், மற்றும் ஏனைய மருந்துபெறும் இடங்களிலும் நோயாளர்கள் மருந்து பெறச்சென்றபோது பனடோல் முடிந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநிலை யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய அரசினர் மத்திய மருந்தகங்களிலும் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோயாளர்கள் கூடியவிலை கொடுத்து தனியார் கடைகளில் மருந்து வகைகளை வாங்கவேண்டியுள்ளது. (154)

## கி. சே. அலுவலகத்தில் மாதாந்த கொடுப்பனவு

(மானிப்பாய்)

வலிமேற்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாய் பகுதியில் தங்கியிருக்கும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களது கொடுப்பனவுகள் கடந்த ஒரு வாரமாக சண்டிலிப்பாய், மானிப்பாய், சுதுமலைப் பகுதியிலுள்ள கிராமசேவையாளர் அலுவலகங்களில் வைத்து வழங்கப்படுகிறது.

மே, யூன் மாதங்களுக்குரிய இப்பணம் தற்பொழுது இளவாலை, மாதகல், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதிகளுக்குரிய கிராமசேவையாளர்களினால் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படுகிறது. (71)

## மாவீரர் தினத்தையொட்டி கிளிநொச்சியில் 25,000 பனம் விதை நாட்டப்படும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியின் காஞ்சிபுரம் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் எதிர்வரும் மாவீரர் தினத்தையொட்டி பனம் விதைகளை நாட்டவுள்ளது.

சுமார் 50 ஏக்கர்களில் 25000 பனை விதைகள் நடுகை செய்யப்படும். இதற்கு தேவையான விதைகள் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக விதை ஒன்று 50 சதவீதம் கொள்வனவு செய்யப்படும்.

இந்நடவடிக்கைக்கு மக்கள் ஆர்வத்துடன் விதைகளை சேகரித்து வழங்கி வருகின்றனர். (அ)

## 14 உ. அ. அ. பிரிவிலும் பிரதேச முன்னணி பாடசாலைகள் நிறுவப்படும் — கல்விப் பணிப்பாளர்

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தின் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் முன்னணிப்பாடசாலைகள் நிறுவப்படும். அந்தப் பிரதேச மாணவர்கள் தத்தமது பிரதேச முன்னணிப் பாடசாலையில் கல்வி கற்பதற்கு வசதிகள் செய்யப்படும். புதிய கல்விச் செயலகங்கள் நிறுவப்படும்போது இந்த நடைமுறையும் செயல்வடிவம்பெறும்.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது "மாணவர்கள் தமது பிரதேசத்தின் சமூக விழுமியங்களையும் இனத்தின் வரலாற்றையும் நன்கு அறிந்து பாதுகாக்க முன்வர வேண்டும்"

"பெற்றோர்கள் நகரப்பாடசாலைகளின் மோகத்தைபிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்தாமல் தமது பிரதேசத்தின் பாடசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி தமது பிள்ளைகளை பிரதேச சூழலில் கல்வி பயில செய்யவேண்டும்'' என்றார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி உரையாற்றும்போது கூறியதாவது: விடுதலைப் போராட்டத்தின் அத்திவாரமாக அமைவது மாணவர் சமுதாயம். எமது தலைவரும் மாணவனாக இருந்த வேளையில் தான் போராட்டத்தை முன்னெடுத்தார். தரப்படுத்தல் தமிழர்களின் கல்வியில் பெரிய அடக்கு முறையை ஏற்படுத்தியது. தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியது

கல்லூரி அதிபர் அருட்சகோதரி எம் எத்தல் வீவா தலைமையில் பரிசளிப்புவிழா நடைபெற்றது. விழாவில் திரு. யோகரத்தினம் யோகி, பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் திரு. தமிகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (74)

## இராசி பலன்

12-10-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 26)

பிரதமை பி. இ. 12-57 வரை, ரேவதி மு. ப. 10-29 வரை. சித்தயோகம், இராகு காலம் காலை 7-32 முதல் 9-02 வரை சுபநேரம்பகல் 12-02 முதல் 1-32வரை.

மேடம்: பெரியார் ஆசி, காரிய சித்தி, புதிய ஸ்தானம்.

இடபம்: மன சங்கடம், உடல் உபாதை, அலைச்சல்

மிதுனம்: நற்கீர்த்தி, தொழில் சிறப்பு, குடும்ப சுகம்.

கடகம்: தர்மசித்தி, வாக்கு வன்மை, அன்னிய உறவு.

சிங்கம்: சரீரபீடை, அனுவசிய தொல்லை, பணமுடை.

கன்னி: தாழ்ந்தநிலை, நம்பிக்கையின்மை, வெறுப்பு.

துலாம்: குடும்ப உல்லாசம், தொழில் பாராட்டு, தியாகம்.

விருச்சிகம்: சிற்றன்னை உதவி, பயணம், இனசன வருகை.

தனுசு; சங்கடமான நிலை, மனச்சஞ்சலம், கோப மிகுதி,

மகரம்: சத்துரு பயம், தொழில் நஷ்டம், விவாதம்.

கும்பம்: வெளியூர் செய்தி, பெண் சகாயம், பணவரவு.

மீனம்: குறுகிய நோக்கு, குடும்ப உறவில் விரிசல், கண்டனம்.

— ஜோஸ்யர்

## விதவைகளுக்கான உதவித் திட்டம்

(வட்டுக்கோட்டை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் விதவைகளுக்கான உதவித் திட்டத்தின்கீழ் அரிசிமா இடித்து பைக்கட்டில் அடைத்து விற்பனை செய்து வருகிறது.

விதவைகளுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கும் வகையில் கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் சேர்ந்துள்ள விதவைப் பெண்களுக்கு சம்பளத்துடன் சாப்பாடும் நிவாரணப் பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் விதவைப் பெண்களது பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய உதவிகளும் இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. (139)

## இந்திய அமைதிப் படையின் ராணுவ நடவடிக்கை பற்றி புகைப்பட கண்காட்சி

[சாவகச்சேரி]

இந்திய அமைதிப்படை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தைக் குறிக்கு முகமாக தென்மராட்சியில் நேற்று முன் தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் இந்நிகழ்வை நினைவு கூருமுகமாக கண்காட்சி ஒன்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்டது.

இவ்வைபவத்தைநேற்றுமுன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சாவகச்சேரி வட்டவைப் பொறுப்பாளர் திரு நந்தன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆரம்பித்து வைத்தார். இக் கண்காட்சியில் இந்திய அமைதிகாக்கும்படை நடாத்திய இராணுவ நடவடிக்கைகளும், இன்று தமிழர்கள்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அட்டூழியங்களை பிரதிபலிக்கும் ஓவியங்கள், புகைப்படங்கள் என்பனவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (155)

# ஐந்தில் ஒரு பகுதி மக்கள் நாட்டில் அகதிகளாயுள்ளனர்

## யுனிசெவ் அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த பத்து வருடங்களாக நடைபெற்று வரும் இனப்பூசலினால் நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் அகதிகளாக்கப்பட்டுள்ளதாக ஐ நா குழந்தைகள் நல நிதிய (யுனிசேவ்) அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கையின் மொத்த மக்கள் தொகையான ஒரு கோடியே 70 லட்சம் பேரில ஐந்திலொருபேர் ஒன்றில் அகதி முகாமிலோ அல்லது வீடு, வாசல்களை இழந்து ஆதரவின்றியோ வசித்து வருகிறார்கள்.

இனப்பூசலால் கடுமையாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பல்வேறு அகதிமுகாம்களில் 6 லட்சத்திற்குமேல் மக்கள் இருப்பதாக புனர்வாழ்வு அமைச்சு கூறியுள்ளது.

அகதி முகாமிலுள்ள இந்த 6 லட்சம் பேரைத்தவிர 2 லட்சம் பேர் வீடு, வாசல்களை இழந்து நிர்க்கதியாகி உழன்று வருகிறார்கள்.

ஏராளமான அகதி முகாம்களை பராமரிப்பதும் இந்த முகாம்களுக்காக மாதமொன்றுக்கு 20 கோடி ரூபா வரை செலவழிக்க வேண்டியிருப்பதும் இலங்கை அரசுக்கு மிகப் பெரும் பிரச்சினையாகப் போய் விட்டதாகவும் அவர் கூறினார். (கி)

# கேரளாவில் கடும் மழை 60 பேர் உயிரிழப்பு

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத்தில் பெய்து வரும் கடும் மழையினால வெள்ளத்திலும் மண்சரிவிலும் அகப்பட்டு 60 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். மேலும் 20 பேரை காணவில்லையென்றும் தெரிவிக்கப் பட்டது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சரிந்து விழுந்துள்ளதாகவும் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு போக்கு வரத்து தடைப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

**புதிய உத்தரவை**

1ம் பக்கத் தொடர்ச்சி)

தாசா நேற்று பிறப்பித்தார்.

ஏற்கனவே இது குறித்த சகல மாற்றங்களும் ஜனாதிபதியின் ஆலோசனையுடன மேற்கொள்ளப்பட்ட போது நேற்றே இதற்கான உத்தரவை அவர் அதிகார பூர்வமாகப் பிறப்பித்தார்.

உடனடியாக இந்த உத்தரவு அமுலுக்கு வந்துள்ளதாகவும் மாற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## வலி-வடக்கு, மேற்குப் பகுதிக்கு

# செஞ்சிலுவைக்குழு இன்று செல்கிறது

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் போது வலிகிழக்கு வலி மேற்குப் பகுதிகளில் அகப்பட்டுக் கொண்ட பொது மக்களின் நிலைபற்றி அறிந்து கொள்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க, யாழ். கிளைப் பிரதிநிதிகள் இருவர் இன்று 2-வது தடவையாக அப்பகுதிகளுக்குச் செல்கின்றார்கள்.

மேற்படி பகுதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்குத் தேவையான உடைகள், மருந்து வகைகள், உட்பட மிக அத்தியாவசியப் பொருட்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தம்முடன் எடுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது. (வி)

**2,700 விரிவுரை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தங்கள் கோரிக்கைகள் குறித்து உயர்கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் பதில் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் சங்கம் தெரிவித்தது.

இதேவேளை இம்மாதம் 14-ம் திகதி பல்கலைக்கழக நிர்வாகப் பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் சம்பள உயர்வு உட்பட சில கோரிக்கைகளை முன் வைத்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவுள்ளனராம். (சி)

# மரண அறிவித்தல்



## திருச்செல்வம் மேரி யோசேப்

[தோட்டத்து செல்லத்துரை]

'நிற்ரு பவனம்' சங்கானை வீதி அச்சுவேலியைச் சேர்ந்த திருச்செல்வம் மேரி யோசெப் 'புத்தூர் கமநலச் சேவை நிலையத் தலைவர், அச்சுவேலி மேற்கு செஞ்சிலுவைச் சங்க தலைவர், அச்சுவேலி வைத்திய சாலை சுகாதாரக் குழு தலைவர், 'வளர்மதி ஐக்கிய நாணய சங்க தலைவர், சமூக சேவையாளர்) 10-10-92ல் காலமானார்.

இவர் காலம் சென்ற திருச்செல்வத்தினதும் திருமதி ஆசீர்வாதம்மா திருச்செல்வத்தினதும் சிரேஷ்ட புதல்வனும், நீட்டா வயிலற்றின் அன்புக் கணவரும், அன்ரன் எவரெஸ்ட் (பிரான்ஸ்), அலோசியஸ் எவரெஸ்ட் (பிரான்ஸ்), மேரி சவுந்தரி (பிரான்ஸ்), மேரி அனிற்ரு (கனடா), அன்றூ எவரெஸ்ட் (அவுஸ்திரேலியா), மேரி அஜந்தராணி (கனடா) அலெக்ஸ் எவரெஸ்ட் (மாணவன் அச்சுவேலி மகாவித்தியாலயம்), மேரி ஆன் சந்திரிகா (புனித திரேசா பாடசாலை மாணவி, அச்சுவேலி), அஜந்தன் எவரெஸ்ட் (மாணவன் மகாவித்தியாலயம் அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வயலற் யோசேப்பின் (பிரான்ஸ்), மரியதாஸ் (பிரான்ஸ், அனிற்ரு (பிரான்ஸ்), பயஸ் (கனடா], போல்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் கௌதமன், கலைவாணி, அருண், சீத்தா, சுஜித்தா, சமன்தா, ஜெனதன், வயலற்றீற்ரு, அஜித், ஸ்ரீபன், மாஸ்ரர் பயஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், மரியம்மா (பிரான்ஸ்), அக்னஸ், இம்மானுவல் (முன்னாள் இலங்கை இராணுவம்), யோசேப்பின் (நீர் கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம சென்ற மனுவல்பிள்ளை (பொலிஸ் உத்தியோகத்தர்', காலம் சென்ற கென்றி யோசேப் (இந்திய இராணுவம்) காலம் சென்ற மரியதாஸ் (திருமலை துறைமுகக் கூட்டுத்தாபனம்), ஸ்கொலஸ்ரிகா, பவளம், அரியராசா, சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 12-10-92 பிற்பகல் 3-00 மணிக்கு அச்சுவேலி குசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
ஞா. அல்பேட்

அச்சுவேலி

(சி-6883)

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

மிட்ரவுன் ரேட்டறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்றைய முதல் ஆட்டத்தில் பொற்பதி அணியை எதிர்த்து சென். நீக்கிலஸ் அணியும் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் அணியும் மோதுகின்றன. (சி)

**மாதம் ஒன்றுக்கு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

படையினர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

இக்காலப் பகுதியில் படையினர் பல கோடி ரூபா பெறுமதியான யுத்ததளபாடங்களையும் புலிகளிடம் இழந்துள்ளதாகவும் விமர்சகர்கள் கூறுகின்றனர். (சி)

**சிலாபம் கடலில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பீரங்கிப் படகு மூழ்கிய போதும் அதிலிருந்த படையினர் அனைவரும் மீட்கப்பட்டு விட்டதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்படகு மூழ்கியதற்கான காரணம் உடனடியாக தெரிய வராத போதும் காலநிலை சீரின்மையே இதற்கு காரணம் என கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

**கல்முனை வீதியில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

களையும் அமைத்துள்ளனர்.

இந்த முகாமில் பெருந்தொகையான ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். சுமார் 26 மைல் நீளமுள்ள மட்டக்களப்பு-கல்முனை வீதியில் கல்லடி, ஆரயம்பதி, செட்டிபாளையம், ஒத்தாச்சிமடம், கல்லாறு, துறைநீலாவணை, கல்முனை, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் ராணுவத்தினரால் 9 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த 9-வது முகாம் அமைக்கப்பட்ட பின்னர் இப்பகுதியிலுள்ள தமிழ் மக்கள் அச்சம் காரணமாக வெளியேறி வருகின்றனர்.

## ஏவுகணைத் திட்டம்

# அமெரிக்க யோசனையை பிரான்ஸ் நிராகரித்தது

(பாரிஸ்)

விண்வெளியிலிருந்து செலுத்தக்கூடிய ஏவுகணை எதிர்ப்பு முறையை உருவாக்க அமெரிக்கா செய்யும் முயற்சியில் சேர்ந்துகொள்ள பிரான்ஸ் மறுத்துள்ளது.

அமெரிக்காவின் இந்த யோசனை ஆயுதப் போட்டியைத் தூண்டிவிட்டு விண்வெளியை ராணுவமயமாக்க வழிவகுத்துவிடும் என்று பிரான்ஸ் அமெரிக்காவுக்கு எச்சரித்துள்ளது.

பாரிஸில் நடைபெற்ற சர்வதேச மாநாடொன்றில் உரையாற்றிய பிரான்ஸ் பிரதமர் இதனைத் தெரிவித்தார். (கே)

**தலைநகரில்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

இதேவேளை மீண்டும் இராணுவ தலைமைப் பீடத்தில் ஜெனரல் ஹமில்டன் உயர் அதிகாரங்களை பெற்றிருப்பதன் மூலம் பாதுகாப்பு படையிலுள்ள மிதவாதிகளை யோங்கியிருப்பதாகவும் ஏ. எப். பி. செய்தியாளர்கூறினார். (சி)

**இலங்கைக்கு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு ஆலோசனை வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 15-ம் திகதி இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு முன்ப தனது ஆலோசனை அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பிக்கப்போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்புக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள மேற்படி குழுவினர் அடுத்தபடியாக மாத்தறை மாவட்டத்துக்கு செல்லவுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (சு)

**மனித உரிமை**

1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் நீதி மன்றத்தில் நிறுத்தப் படுவார்களா என்றும்,

1990—91 ஆண்டு ஜனவரி 11ம் திகதிக்கு முன்னர் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு அனுமதி வழங்க அரசு ஏன் மறுக்கிறது என்றும் செய்தியாளர்கள் கேள்விமேல் கேள்விகள் கேட்டனர்.

அப்படிப்பட்ட விசாரணை நடத்துவது என்பது நடைமுறைக்கு கடினமான, இயலாத விடயம் என்று திரு. பிரட்மன் பதிலளித்தார்.

**மன்னிப்புச்**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தின் போது இலங்கையின் மனித உரிமை மீறல்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்படவுள்ளதாம்.

இலங்கையில் பாதுகாப்பு படையினர் வடக்கு கிழக்கு பகுதியில் மனித உரிமை மீறல்களை செய்து வருவதாக மன்னிப்புச்சபை கடைசியாக வெளியிட்ட அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது. (சி)

**இராணுவ**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு நிலைமை ஏற்பட்டிருப்பதால் புலிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றியே என ஏ. எப். பி செய்தியாளர் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதத்திற்குப் பின் கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்து அதிகாரங்கள் முப்படைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டபின் யுத்த முனையில் படையினருக்கு பெரும் இழப்பு ஏற்படத் தொடங்கியது.

ஈழப்போராட்டத்தில் இது வரைகாலமும் ஏற்படாத பல மாற்றங்களும், வெற்றிகளும் புலிகளுக்கு கிடைத்தன நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டனர், தலைமைத் தளபதிகள் பலர் உயிரிழந்தனர். யுத்தளபாடங்கள் பல புலிகளிடம் படையினர் இழந்தனர். ஆயுதகிடங்கு ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறான பாரிய நெருக்கடிகளை ராணுவ கட்டமைப்பில் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தியது. இது புலிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி எனவும் அச்செய்தியாளர் குறிப்பிட்டார். (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336/81